அறிக்கை அளிக்கக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண். 15/2019

(சி.அ.ம.(உ) எண் 12794/2014-இலிருந்து எழுகிறது)

ஸ்வபன் குமார் சாட்டர்ஜி ....மேல்முறையீட்டாளர்

-எதிர்-

மத்திய புலனாய்வுத் துறை ....எதிர்மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளரான சுவப்பன் குமார் சாட்டர்ஜி, சி.ஆர்.ஆர். எண் 440/2015-இல் கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட, 04.05.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை எதிர்த்தார், இதன்மூலம் திரு.எச்.எஸ்.துதேஜா என்ற சாட்சியை விசாரிக்க அனுமதித்து, விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 05.12.2014-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது.

3. இம்மேல்முறையீட்டைத் தீர்வு செய்வதற்குத் தேவையான பொருண்மைகள், சுருக்கமாக பின்வருமாறு:

4. கல்கத்தா, சர்ச் லேன், மத்திய புலனாய்வுத் துறை (சுருக்கமாக ' ம.பு.து. ') பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு, காவல்துறை கண்காணிப்பாளர் முன்பாக திரு. பி.என். கன்னா என்பவரால் புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது, அதில், 1860-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 477

அ/471/468/420/120 ஆ ஆகியவற்றின் கீழ் 20.08.1983-ஆம் தேதியிடப்பட்ட ம.பு.து. வழக்கு எண் 7/ ஈ/83-இல் தற்போதைய மேல்முறையீட்டாளருடன் மற்றவர்களும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக வரிசைப்படுத்தப்பட்டனர். விசாரணை முடிந்ததன்பேரில், மேல்முறையீட்டாளர் மற்றும் மூவருக்கு எதிராக, விசாரணை முகமை, மேற்சொன்ன பிரிவுகளின் கீழும், 1947-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டம், பிரிவு 5 (1) (சி) (டி) உடனிணைந்த பிரிவு 5 (2) -இன் கீழும் குற்ற அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தது. வழக்கு விசாரணைக்கு வந்தது. இருபத்தொன்பது அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். கையெழுத்து நிபுணரான திரு. எச்.எஸ். துதேஜா அவர்களை விசாரிப்பதற்காக வேண்டுரைத்து, அரசுத்தரப்பு வழக்குரைஞர் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார், அது அனுமதிக்கப்பட்டு, அவரை, விசாரிப்பதற்காக 24.03.2004 அன்றும், அதன்பிறகு 26.03.2004 அன்றும் நாள் நிர்ணயிக்கப்பட்டது. சாட்சியத் தேதிக்கு முன்பாகவே சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு அரசுத்தரப்பு பணிக்கப்பட்டது. எனினும், திரு.எச்.எஸ். துதேஜா நீதிமன்றத்தில் முன்னிலையாகாததன் காரணமாக, அரசுத்தரப்பு வழக்குரைஞர் அவரை விசாரிப்பதற்கு அடுத்த நாளை நிர்ணயிப்பதற்காக மேலும் காலஅவகாசம் கோரினார். வழக்குரைஞரின் இந்த வேண்டுகோள் நடுவரால் ஏற்கப்பட்டு, 10.05.2004 முதல் 12.05.2004 வரையிலான நாட்களை நிர்ணயிப்பதற்கான உத்தரவுடன், திரு. எச்.எஸ். துதேஜா உட்பட அனைத்து சாட்சிகளுக்கும் அழைப்பாணை அனுப்ப அரசுத்தரப்புக்கு உத்தரவிடப்பட்டது. மேற்படி சாட்சி மீண்டும் முன்னிலையாகவில்லை. அழைப்பாணைகளையும், பிணையில் விடத்தக்க பற்றாணையையும் மீண்டும் வழங்குவதற்காக அரசுத்தரப்பு வேண்டுரைக்காமல், திரு. எச்.எஸ். துதேஜா உட்பட சாட்சிகளுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்புவதற்காக ஒரு தனிப்பட்ட மனு அரசுத்தரப்பு வழக்குரைஞரால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வேண்டுரையானது ஒரு கடைசி வாய்ப்பாகவே நடுவரால் பரிசீலிக்கப்பட்டது. அன்றிலிருந்து எப்பொழுதெல்லாம் திரு. எச்.எஸ். துதேஜா அவர்களை விசாரிப்பதற்காக நாள் குறிக்கப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் அவர் முன்னிலை யாவதேயில்லை

மற்றும் அரசுத்தரப்பும் காலஅவகாசமோ அல்லது வழக்கை ஒத்திவைப்பதற்கோ வேண்டுரைக்கும் அதே மனுவுடன் முன்னிலையாகும்.

5. ஆச்சரியத்தக்கவகையில், இந்த நடைமுறையானது 2004-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி, பதிமூன்று ஆண்டு காலமாக ஆட்சேபிக்கப்படாமல் தொடர்ந்து வருகிறது. கல்கத்தா உயர் நீதிமன்றம், திரு. எச்.எஸ். துதேஜாவை முன்னிலைப்படுத்துவதற்கு ம.பு.து.-க்கு ஒரு கடைசி வாய்ப்பை வழங்கி, சி.ஆர்.ஆர். எண் 3436/2006- ஐ 28.07.2011-ஆம் தேதியன்று தீர்வுசெய்தது என்பதை இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். அவரையும், மற்ற சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தி விசாரிப்பதற்கு ம.பு.து. தரப்பில் தவறுகை ஏற்பட்டால், 1985-ஆம் ஆண்டு முதல் இவ்வழக்கு நிலுவையிலிருந்து வருகிறது என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்திற்கொண்டு, ம.பு.து.-க்கு மேலும் வாய்தா வழங்காமல், விசாரணையை மேல்நடத்த வேண்டும் என்று கருத்துரைக்கப்பட்டது.

6. எனினும், விசாரணை நீதிமன்றம், அவர்களது சாட்சியான திரு. எச்.எஸ். துதேஜாவை 03.02.2012 அன்று முன்னிலைப்படுத்துவதற்கு அரசுத்தரப்பை அனுமதித்து இன்னமும் கால அவகாசம் அளித்துவந்தது, அவரை முன்னிலையாகும்படி கோரியும், பத்தாண்டுகளுக்கு மேலாக அதை இன்னமும் நிறைவேற்றாமல் இருந்துவரும் ஒரு கற்பனை பாத்திரமாக அவரை தற்போது கருதுவதில் தவறேதுமில்லை. அழைப்பாணை உரியமுறையில் சார்வு செய்யப்பட்டிருந்தும், அவர் அந்த நாளன்றும் முன்னிலை ஆகவில்லை. மீண்டும், வழக்கு அவர் சாட்சியத்திற்காக 24.02.2012 அன்று ஒத்திவைக்கப்பட்டது. அதற்குப்பிறகுங்கூட, ம.பு.து. மேற்படி சாட்சியை பல நாட்கள் முன்னிலைப்படுத்த தவறிவிட்டது.

7. விசாரணையானது, விசாரணை நீதிமன்றத்தில் வெகுகாலமாக நிலுவையிலிருந்து வருவதால், விசாரணையை எவ்வளவு விரைவாக முடிக்க இயலுமோ, அவ்வளவு விரைவாக முடிப்பதற்கு, குறிப்பாக, ஆறு மாதங்களுக்குள் முடிப்பதற்கு விசாரணை நீதிமன்றத்தால் அனைத்து

நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும் என மீண்டும் கல்கத்தா உயர் நீதிமன்றம் 15.09.2014-ஆம் தேதியிடப்பட்ட குற்றவியல் சீராய்வு விண்ணப்ப எண் 2696/2014-இல் கருத்துரைத்தது.

8. 25.11.2014 அன்று மேல்முறையீட்டாளர் பி.சா .1-ஆக விசாரிக்கப்பட்டார். அதே நாளன்று திரு. எச்.எஸ். துதேஜாவை விசாரிப்பதற்கு அரசுத்தரப்பு மீண்டும் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்தது. இவ்விண்ணப்பமானது, 05.12.2014 அன்று நடுவரால் அனுமதிக்கப்பட்டது. மேலும், இவ்வுத்தரவு உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது.

9. நாங்கள் தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் மற்றும் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்குரைஞர் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம்.

10. 1973-ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் (சுருக்கமாக ' சட்டம் '), பிரிவு 311 முக்கியமான சாட்சிக்கு அழைப்பாணை அனுப்ப அல்லது முன்னிலையாகியுள்ளவரை விசாரிப்பதற்கான அதிகாரம் குறித்து வகைசெய்கிறது. அது பின்வருமாறு:

> **"311. முக்கியமான சாட்சிக்கு அழைப்பாணை அனுப்ப அல்லது முன்னிலையாகியுள்ளவரை விசாரிப்பதற்கான அதிகாரம்.-**நீதிமன்றம் எதுவும், இச்சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கையில் எந்தக் கட்டத்திலும், ஒரு சாட்சியான எவருக்கும் அழைப்பாணை அனுப்பலாம் அல்லது ஒரு சாட்சியாக அழைப்பாணை அனுப்பாவிட்டாலும் முன்னிலையாகிய எவரையும் விசாரிக்கலாம் அல்லது ஏற்கெனவே விசாரிக்கப்பட்ட எவரையும் மீண்டும் அழைத்து மறுவிசாரணை செய்யலாம் மற்றும் நீதிமன்றம் வழக்கை நியாயமாகத் தீர்மானிப்பதற்கு அத்தகையவரது சாட்சியம் மிக்க அவசியமென்று தோன்றுமாயின், அவருக்கு அழைப்பாணை பிறப்பித்து விசாரிக்கவோ அல்லது மீண்டும் அழைத்து மறுவிசாரணை செய்யவோவேண்டும்.

11. ஒரு கட்டுப்பாடு விதிக்காத இப்பிரிவின் முதல் பகுதியானது, குற்றவியல் நீதிமன்றத்திற்கு முழுமையான விருப்புரிமை அதிகாரத்தை வழங்கி, இச்சட்டத்தின்படி செய்யப்படும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கைகளில் எந்தக் கட்டத்திலும், (i) சாட்சியான எவருக்கும் அழைப்பாணை அனுப்பவும்; அல்லது (ii) சாட்சியாக அழைப்பாணை அனுப்பப்படாவிட்டாலும் முன்னிலையாகியுள்ள எவரையும் விசாரிக்கவும்; அல்லது (iii) ஏற்கெனவே விசாரிக்கப்பட்ட எவரையும் மீண்டும் அழைத்து மறுவிசாரணை செய்யவும் என இந்த மூன்று வழிகளில் ஏதேனும் ஒரு வழியில் செயல்படுவதற்கு நீதிமன்றத்தை இயல்விக்கிறது. வழக்கை நியாயமாகத் தீர்மானிப்பதற்கு அவரது சாட்சியம் மிக்க அவசியமென தோன்றுமாயின், அந்த நபருக்கு (i) அழைப்பாணை அனுப்பி விசாரித்தோ அல்லது (ii) அவரை மீண்டும் அழைத்து மறுவிசாரணை செய்யவோ நீதிமன்றத்தின்மீது ஒரு கடமையை, வலியுறுத்துக் கட்டளையான இரண்டாவது பகுதி விதிக்கிறது.

12. நீதியின் குறிக்கோளை அடைவதற்காக மட்டுமே, நீதிமன்றத்தால் பிரிவு 311-இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தை துணைகொள்ளமுடியும் என்பது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. அதிகாரமானது உறுதியான மற்றும் செல்லத்தக்க காரணங்களுக்காக மட்டுமே செயலுறுத்தப்பட வேண்டும் மற்றும் அது மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செயலுறுத்தப்படவேண்டும். நீதிமன்றம், இப்பிரிவின்கீழ் நீதியின் நலன்கருதி, தேவையான மறுவிசாரணை செய்வதற்கோ அல்லது மேல்விசாரணை செய்வதற்கோ சாட்சிகளை மீண்டும் அழைப்பதற்கும் பரவலான அதிகாரத்தைப் பெற்றுள்ளது, ஆனால், ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபிறகே அதை செயலுறுத்த வேண்டும். நீதிமன்ற கட்டளையைத் தவறாகப் பயன்படுத்தும் விதமாக விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் கருதுமானால், இவ்வகையத்தின் கீழான அதிகாரத்தைச் செயலுறுத்தக்கூடாது.

13. அரசுத்தரப்பு சாட்சியம் வெகுநாட்களுக்கு முன்பாகவே முடிக்கப்பட்டுவிட்டதாலும், ஏற்கெனவே சாட்சியத்தை விசாரிக்காததற்காக

அளிக்கப்பட்ட காரணங்கள் திருப்திகரமாக இல்லாததாலும், காலங்கடந்த நிலையில் சாட்சிக்கு அழைப்பாணை அனுப்புதல் என்பது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதாலும், அது அனுமதிக்கப்படக்கூடாது. அதேபோன்று, நீதிமன்றமானது, இவ்வகையத்தின்கீழ் சாட்சியை மீண்டும் அழைப்பதற்காக அடுத்தடுத்து விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வதற்கு ஊக்குவிக்கக் கூடாது.

14. தற்போதைய நிலவரப்படி, வழக்கு 1983-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 29 அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். திரு.எச்.எஸ். துதேஜாவை விசாரிப்பதற்கு, அரசுத்தரப்பின் விண்ணப்பமானது 2004-ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், அரசுத்தரப்பு அவரை விசாரிப்பதற்காக நீதிமன்றத்தில் அவரை முன்னிலைப்படுத்தத் தவறிவிட்டது. அதன்பிறகு, அவருக்கு அழைப்பாணை அனுப்ப பல விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டு, அவையனைத்தும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அரசுத்தரப்பு, நீதிமன்றத்தில் அவரை, முன்னிலைப்படுத்தத் தவறிவிட்டது.

15. ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, 28.07.2011 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றம், அவரை முன்னிலைப் படுத்துவதற்கு கடைசி வாய்ப்பொன்றை வழங்கியது மற்றும் சாட்சிகளை முன்னிலைப்படுத்தி, அவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு ம.பு.து. தரப்பில் தவறுகை நேர்ந்தால், விசாரணை நீதிமன்றம் ம.பு.து.-க்கு மேலும் வாய்தா ஏதும் வழங்காமல் விசாரணையை மேல்நடத்துதல் வேண்டும் என்று அறிவித்தது. அதன்பிறகுங்கூட, ம.பு.து.-ஆல் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

16. விசாரணையானது, விசாரணை நீதிமன்றத்தில் வெகுகாலமாக நிலுவையிலிருந்து வருவதால், விசாரணையை எவ்வளவு விரைவாக முடிக்க இயலுமோ, அவ்வளவு விரைவாக முடிப்பதற்கு, குறிப்பாக, ஆறு மாதங்களுக்குள் முடிப்பதற்கு விசாரணை நீதிமன்றத்தால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும் என குற்றவியல் சீராய்வு

விண்ணப்பத்தில் மீண்டும் 15.09.2014 அன்று உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது. அதன் பிறகுங்கூட விசாரணை நீதிமன்றம் திரு. எச்.எஸ்.துதேஜாவுக்கு அழைப்பாணை அனுப்புவதற்காக அரசுத்தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்துள்ளது, அவ்வுத்தரவு உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. எங்களது கருத்தில், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு சாட்சியான திரு. எச்.எஸ்.துதேஜாவுக்கு அழைப்பாணை அனுப்புவதற்கான அரசுத்தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்திருக்கவேண்டும்.

17. முடிவில், மேல்முறையீடு வெற்றியடைந்து மேற்படியாக அனுமதிக்கப்படுகிறது. 05.12.2014-ஆம் தேதியிடப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவும், 04.05.2017-ஆம் தேதியிடப்பட்ட உயர் நீதிமன்றத்தின் உத்தரவும் இதன்மூலம் செல்லாததாக்கப்படுகின்றன மற்றும் திரு. எச்.எஸ். துதேஜாவுக்கு அழைப்பாணை அனுப்புவதற்காக வழக்குரைஞரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் இதன்மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

[மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே. சிக்ரி]

[மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்]

புதுதில்லி;

04.01.2019

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."